03, ஆகஸ்ட், 2022 சுற்றறிக்கை இல: 54/2022

**அனைத்து மாவட்ட ஆணையாளர்களுக்குமானது,**

**வருடாந்த சாரணர் கணக்கெடுப்பு - 2022**

2022ம் ஆண்டுக்கான வருடாந்த சாரணர் கணக்கெடுப்பு மற்றும் தரவுகள் சேகரிப்பு **செப்டெம்பர் 30ஆம் திகதி** வரை முன்னெடுக்க தேசிய சாரணர் தலைமையகத்தால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை சாரணர் சங்கமானது உலக சாரணர் இயக்கத்தின் 172 உறுப்பு நாடுகளில் சுமார் 57 மில்லியன் அங்கத்தவர்களைக் கொண்ட உலக சாரணர் இயக்க உறுப்பு நாடாகும். அதனால் மழலை சாரணர், குருளை சாரணர், சாரணர் மற்றும் திரி சாரணர்கள் மற்றும் தலைவர்களை உலக சாரணர் இயக்கத்தில் பதிவு செய்ய வேண்டியது எமது பொறுப்பாகும்.

இதற்கு உங்கள் மாவட்டத்தில் விநியோகிக்கவென எக்செல் சீட்ஸ் - Excel sheets தொகுதி அறிமுகப்படுத்தப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கவென மாவட்ட ஏற்பாட்டாளர் (கணக்கெடுப்பு) ஒருவரை நியமித்து அவர்/அவளின் பெயர், சாரணர் பதவி, தொடர்பு இலக்கம், மின்னஞ்சல் முகவரி என்பவற்றை 2022 ஆகஸ்ட் 15ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தேசிய சாரணர் தலைமையகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

ஒவ்வொரு சாரணர் பிரிவுத் தலைவர்களும் (மழலை, குருளை, சாரணர் மற்றும் திரி சாரணர்) சாரணர் குழுக்களும் விண்ணப்பங்களை முழுமையாக பூர்த்தி செய்து, குழு சாரணர் தலைவர்/அதிபர் கையொப்பம்/அங்கீகாரம் பெற வேண்டும். அங்கத்துவ கட்டணங்களுடன் (கட்டண விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மாவட்ட ஏற்பாட்டாளர் (கணக்கெடுப்பு) ஊடாக **2022 ஒக்டோபர் 15ஆம் திகதி** அல்லது அதற்கு முன்னர் மாவட்ட ஆணையாளருக்கு கிடைக்கப்பெறச் செய்ய வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களில் மாவட்ட ஏற்பாட்டாளர் (கணக்கெடுப்பு) மற்றும் மாவட்ட ஆணையாளர் முழுமையாக கையொப்பம் இட்டிருக்க வேண்டும். அத்துடன் அங்கத்துவ கட்டணம் மற்றும் கட்டண ஆதார பற்றுச்சீட்டு **2022 ஒக்டோபர் 31ஆம் திகதி** அல்லது அதற்கு முன் தேசிய சாரணர் தலைமையகத்தை வந்தடையச் செய்ய வேண்டும்.

கணக்கெடுப்பின் அடிப்படையில் அங்கத்துவ கட்டணம் செலுத்தி காசாளரிடம் அதற்கான பற்றுச்சீட்டு பெற்றவர்களுக்கு மாத்திரமே 2023ஆம் ஆண்டுக்கான கணக்கெடுப்பு சின்னங்கள் தேசிய சாரணர் தலைமையகத்தால் வழங்கப்படும்.

- இணைப்பு A – மாவட்ட சாரணர் குழுவால் பூர்த்தி செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆணையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- இணைப்பு B – மாவட்ட ஏற்பாட்டாளரால் (கணக்கெடுப்பு) பூர்த்தி செய்யப்பட்டு மாவட்ட ஆணையாளரால் தேசிய சாரணர் தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கீழ்காணும் வங்கிக் கணக்கில் கணக்கெடுப்பு கட்டணத்தை வைப்பிலிட முடியும்.

**204-100130085324 மக்கள் வங்கி தலைமை கிளை**

கட்டணம் செலுத்தப்பட்ட பின் பற்றுச்சீட்டை **074–1146133** என்ற இலக்கத்திற்கு வாட்ஸ்அப் செய்யவும். (வாட்ஸ்அப் செய்யப்படும் பற்றுச்சீட்டில் பணம் வைப்பிலிடும் நபரின் பெயர், திகதி, மாவட்டம், பணத்தின் அளவு, கட்டணம் செலுத்திய அங்கத்தவர் எண்ணிக்கை என்பவற்றுடன் "2022 கணக்கெடுப்பு" என தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டியுள்ளதால் ATM இயந்திரம் ஊடாக பணம் வைப்பிலிடுவதை தவிர்த்துக் கொள்ளவும்.)

**வருடாந்த கணக்கெடுப்பு கட்டணம்**

2022ஆம் ஆண்டு ஒரு அங்கத்தவருக்கான கணக்கெடுப்பு/கட்டணத் தொகை **50 ரூபா**.

சாரணர் - மழலை, குருளை, கனிஷ்ட, சிரேஷ்ட மற்றும் திரி சாரணர் அங்கத்தவருக்கும் சாரணர் தலைவர்கள், ஆணையாளர்கள், கிளை சங்க அங்கத்தவர்கள் ஆகியோருக்கும் கட்டணம் **50 ரூபா.**

கணக்கெடுப்பு விண்ணப்பங்களில் நீங்கள் வழங்கும் விபரம்/தகவல்கள் கணனி தரவுகளாக பயன்படுத்தப்படும். அதனால் அனைத்து உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் சாரணர் தலைவர்கள்/சாரணர் குழுக்களுக்கு சரியான தகவல்களை வழங்குமாறு அறிவுறுத்தவும்.

2022ஆம் ஆண்டு கணக்கெடுப்புடன் தொடர்புடைய அனைத்து விபரங்களையும் எக்செல் சீட்ஸ் ஆவணத்தையும் slsa.census@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தயவுடன் அனுப்பி வைக்கவும்.

இதுவிடயத்தில் மாவட்ட ஏற்பாட்டாளர்கள் மற்றும் ஆணையாளர்களின் பூரண ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்.

நன்றி

உங்கள் சாரணர் சேவையில்

***Dr.மஞ்சுள சஹபந்து***

உதவி பிரதம ஆணையாளர் (நிர்வாகம்)

***ஜனப்ரித் பெனாண்டோ***

பிரதம ஆணையாளர்

**நகல்-:** தலைவர், நிறைவேற்றுக் குழுத் தலைவர், கௌரவ செயலாளர், கௌரவ பொருளாளர்

இலங்கை சாரணர் சங்கத்தின் அனைத்து தலைமையக ஆணையாளர்கள்.